**வட மாகாண சபை 2016**

-----------------------------------------------------

வட மாகாண சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.1 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.2 கணக்காய்வாளரின் பொறுப்பு

--------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின்

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வட மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வட மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வட மாகாண சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 அவசரகால நிதிய நிதிக்கூற்றுக்கள்**

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் படி அவசரகால நிதியம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இது தொடர்பில் 2017 செப்தெம்பர் 07 இல் நடந்த பொதுக்கணக்குகள் குழுவில் இவ்விடயத்தை பார்த்து நடவடிக்கை எடுக்கும் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டது.

2.2.2 **கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 288,202,984 கூட்டுத்தொகையான நடைமுறையல்லா சொத்தின் வேறுபாடு மாகாண நிதிய நிதிக்கூற்றுகளுக்கும் 03 மாகாண திணைக்கள ஒதுக்கீட்டு கணக்குகளுக்கும் இடையில் காணப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| திணைக்களத்தின் பெயர் | நிதிக்கூற்றுப்படியான பெறுமதி | ஒதுக்கீட்டு கணக்கு படியான பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பிரதம செயலாளர் செயலகம் | 24,185,919 | 312,309,823 | 288,123,904 |
| நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் | 211,300,241 | 211,284,911 | 15,330 |
| உள்ளூராட்சி | 1,093,474,842 | 1,093,411,092 | 63,750 |
| | | | **288,202,984** |

(ii) மீளாய்வாண்டில் வாடகைக்கு விடப்பட்ட கட்டடம் தொடர்பில் வவுனியா பொது வைத்தியசாலையால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 900,000 வாடகை நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iii) விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 6,075,608 வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாததுடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்கும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iv) முத்திரை வரி, நீதிமன்ற தண்டப்பணமாக கூட்டுமொத்தம் ரூபா 696,040,691 உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாக மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட தொகை நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக காட்டப்படுவதற்கு பதிலாக மீளாய்வாண்டில் வருமானமாக காட்டப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான மிகை குறித்த தொகையால் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

**பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

மீளாய்வாண்டின் போது பின்வரும் மாகாண திணைக்களங்களிற்கு வழங்கப்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான 21 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் 2017 திசெம்பர் 31 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அந்தக் கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் கணிப்பிடத்தக்க பெறுமதி ரூபா 5,666,807 தொகையாகும்.

| திணைக்களங்களின் பெயர் | பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| கல்வி | 19 | 2,538,504 |
| விளையாட்டுக்கள் | 02 | 3,128,303 |
| | **21** | **5,666,807** |

### 2.2.4 பெறவேண்டிய கணக்குகள்

மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து ஏனைய மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு இடம் மாற்றலாகிச் சென்ற, உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 18,683,434 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை 18 மாகாண திணைக்களங்களினால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| (அ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | **ரூபா.** | |
| அத்தியாயம் XIX இன் 5.4 ஆம் பிரிவு | | அரச விடுதிகளில் வசிப்பதற்கான வாடகை உரிய உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) **வட மாகாணத்தின் நிதி ஒழுங்குவிதிகள் (பிஎவ்ஆர்)** | | |
| மா.நி. ஒழுங்குவிதி 69(i) | 1,735,000 | வாகன விபத்து இழப்பு தொடர்பில் கல்வித் திணைக்களத்தால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| மா.நி. ஒழுங்குவிதி 106 மற்றும் 107 | 3,794,357 | ரூபா 3,794,357 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் மாகாண அமைச்சு மற்றும் ஆறு மாகாண திணைக்களங்களின் உரிய உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்படாமலும் அனுமதிக்கப்படாமலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| மா.நி. ஒழுங்குவிதி 407 | | மாகாண சபையின் திணைக்களங்கள் மற்றும் அமைச்சினால் களஞ்சியம் மற்றும் பணத்தின் பாதுகாப்புடன் தொடர்புடைய நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டவர்களிடமிருந்து பாதுகாப்புப் பிணை பெறப்படவில்லை. |

(இ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்**

-------------------------------------------------------

| | | |
|---|---|---|
| நி.பி. 110 | - | வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் இயந்திர பிரிவினால் நட்டங்கள் மற்றும் சேதங்களிற்கான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 511 | 9,535,076 | செயற்பாட்டு நட்டங்களை ஈடுசெய்வதற்காக மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் இயந்திர பிரிவினால் முற்பண முயற்சிகளுக்கு பாதீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) **சுற்றறிக்கை ஏற்பாடு**

----------------------------------

| | | |
|---|---|---|
| (i) 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 6,991,464 | ஆறு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை சுற்றுநிருப ஏற்பாட்டிற்கமைய பரீட்சிக்கப்படவில்லை. |
| (ii) 2002 செப்டம்பர் 30 இன் 364 (3) ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | | விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்கத்தினால் வழங்குனர் மற்றும் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட பெறுமதி கூட்டிய வரி (வற்) விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2015 மார்ச் 25 ஆம் திகதிய 01/2015 இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கை | 925,495 | மாகாண கல்வி அமைச்சினால் பிரமாண அடிப்படையிலன கொடையில் மூலதன பகுதியிலிருந்து மீண்டெழும் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

**3. வருமான முகாமைத்துவம்**

--------------------------------------------

கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிலும் மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளின் போதும் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | | | |
|---|---|---|---|---|---|
| | **2016** | **2015** | **2014** | **2013** | **2012** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| வரி வருமானம் | 2,745 | 2,074 | 1,754 | 1,410 | 1,532 |
| வரியற்ற வருமானம் | 370 | 157 | 111 | 121 | 116 |
| **மொத்தம்** | **3,115** | **2,231** | **1,865** | **1,531** | **1,648** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 884 மில்லியன் அல்லது 28 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்த வருமானத்தின் முன்னேற்றத்திற்கு முத்திரைக் கட்டணம் மற்றும் மதுசார விற்பனை வருமானத்தின் முக்கிய அதிகரிப்பு மற்றும் 32 சதவீதத்தால் வரி வருமான அதிகரிப்பு என்பன பிரதான காரணியாக இருந்தது.

ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 152,437,312 தொகையான நீதிமன்ற தவணைக்கட்டணத்தினுடைய அதிகரிப்பினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சபையினுடைய வரியல்லா வருமானம் 135 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 142,648,761 மிகையுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 23,176,965 ஆன பற்றாக்குறையினை சுட்டிக்காட்டுகின்றது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2016 | 2015 | வேறுபாடு |
|---|---|---|---|
| **வருமானம்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| வரி வருமானம் | 2,745 | 2,074 | 671 |
| வரியற்ற வருமானம் | 370 | 157 | 213 |
| அரசாங்க மானியங்கள் | | | |
| மீண்டெழும் | 16,757 | 16,268 | 489 |
| மூலதனம் | 3,658 | 2,547 | 1,111 |
| **மொத்தம்** | **23,530** | **21,046** | **2,484** |

| | | | |
|---|---|---|---|
| **செலவினம்** | | | |
| ஆளணி வேதனங்கள் | 14,807 | 14,128 | 679 |
| மீண்டெழும் ஏனையவைகள் | 4,505 | 4,244 | 261 |
| மூலதனச் செலவினம் | 4,241 | 2,531 | 1,710 |
| **மொத்தம்** | **23,553** | **20,903** | **2,650** |
| **மிகை/(பற்றாக்குறை)** | **(23)** | **143** | |

## 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் மொத்தச் செலவினம் ரூபா 23,553 மில்லியனானதுடன் அதில் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 19,312 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்ததுடன் இது மொத்தச் செலவினத்தில் 82 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. மொத்த மீண்டெழும் செலவினத்தில், ஆளணி வேதனங்களிற்காக ரூபா 14,807 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்ததுடன் இது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 77 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செலவினம் ரூபா 18,372 மில்லியனானதுடன் இது அந்த ஆண்டிற்கான மொத்தச் செலவினத்தில் 87 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

## 5. ஒதுக்கீட்டு கணக்குகள், முற்பணக் கணக்குகள், கட்டுநிதிக் கணக்குகள் மற்றும் பொது வைப்புக் கணக்குகள் மீதான கருத்துரைகள்

---

### 5.1 ஒதுக்கீட்டு கணக்குகள் மீதான கருத்துரைகள்

---

முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை, வருடாந்த மதிப்பீடுகளில் நிதியேற்பாடுகளில்லாமல் செலவினம் ஏற்படுதல், கணக்குகளில் நிலுவையாகவுள்ள பொறுப்புக்கள் விடுபடுதல், மீண்டெழும் செலவினத்தை மூலதனச் செலவினத்திற்கு தாக்கல் செய்தலும் எதிர்மாறாக மூலதனச் செலவினத்தை மீண்டெழும் செலவினத்திற்கு தாக்கல் செய்தலும், மூலதனச் செலவின விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமை, சேமிப்புக்களிற்கான போதுமான மற்றும் திருப்திகரமான விளக்கங்களில்லாமை மற்றும் மாகாணத் திறைசேரிப் புத்தகங்களுடன் திணைக்களப் புத்தகங்கள் கணக்கிணக்கம் செய்யப்படாமை போன்ற மீண்டும் ஏற்பட்ட பொதுவான குறைபாடுகள் மீளாய்வாண்டிற்காக சில மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டின் போது மாகாண அசைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

i. 32 செலவின விடயக் குறியீடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் செயல்நிமித்த அடிப்படையில் ரூபா 106,774,578 ஆன செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக 09 மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்காக மாகாண திறைசேரியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் சில அமைச்சுக்கள் திணைக்களங்கள் இணங்கவில்லை.

iii. நான்கு திணைக்களங்கள் தொடர்பில் பத்து வருடங்களிற்கு மேலாக ஒதுக்கீட்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 49,059,804 கூட்டுத்தொகையான 35 விடயங்களின் நட்டங்கள் மீது மாகாண நிதி ஒழுங்குவிதி 69 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | நட்ட விடயங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| விவசாயம் | 05 | 98,259 |
| விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் | 10 | 17,554,713 |
| நீர்ப்பாசனம் | 09 | 21,761,867 |
| சுகாதார சேவைகள் | 11 | 9,644,965 |
| | **35** | **49,059,804** |

iv. மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது அதிக எண்ணிக்கையான சொத்துக்கள் தொலைந்தவையாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அனேகமான திணைக்களங்கள் அவர்களுடைய ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அந்த நட்டங்களை உள்ளடக்கியிருக்கவில்லை. மாகாண நிதி ஒழுங்குவிதி 69 இன் பிரகாரம் அந்த திணைக்களங்களால் நட்டங்கள் மீதான பூர்வாங்க அறிக்கைகள் மற்றும் இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

v. மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலதன முன்னேற்றத்தின் கீழ் 10 வேலை விடயங்களிற்காக ஏற்பட்ட அண்ணளவாக ரூபா 1,890,493 க்கு மேலான மூலதன செலவினத்தின் கணிசமான தொகை மீண்டெழும் செலவினத்தின் கீழ் தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 5.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

03 அமைச்சுக்கள் மற்றும் 15 திணைக்களங்களிடமிருந்து இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தரிடமிருந்து பெறவேண்டியவைகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தீர்ப்பனவு செய்யப்படாத கடன்களிற்கான ரூபா 18,683,434 வரவு மீதியானது, கணக்காய்விற்காக அவ் மீதிகளிற்கான உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருக்காததால் உள்ளபடியான தேறக்கூடிய தொகையை பிரதிபலிக்கின்றதா என மதிப்பிடுவதற்கு சாத்தியமற்றிருந்தது. கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை மிகவும் மந்த நிலையில் உள்ளது.

## 5.3 வர்த்தக முற்பணக் கணக்குகள்

-------------------------------------------------------

## I. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) செக்கட்டிப்புலவு பண்ணையில் 16 ஆடுகளின் இறப்பு காரணமாக ஏற்பட்ட திரட்டிய நட்டம் ரூபா 95,625 நிதிக்கூற்றுக்களில் கொண்டுவரப்படவில்லை.

(ஆ) மூன்று பண்ணைகளில் உள்ள எண்பத்தேழு சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டுவரப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது இரு பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 1,387,668 பெறுமதியான ஐந்து மூலதன முன்னேற்ற வேலைகள் நடைமுறையல்லாச் சொத்துக்களில் சேர்க்கப்படவில்லை.

## II. கைத்தொழில் திணைக்களம்

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் கணக்குகளில் காட்டப்பட்ட திரட்டிய பெறுமானத்தேய்வு ரூபா.1,153,342 இனை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நார் இயந்திரம், நூல் சுற்றும் தொகுதி மற்றும் தறிகள் போன்ற 23 நுகரத்தகு பொருட்களின் பெறுமதி தீர்மானிக்கப்பட்டு முற்பணக் கணக்கு நடவடிக்கை நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்படவில்லை.

## 5.4 கட்டுநிதிக் கணக்குகள்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. நிதிப்பிரமாணம் 371 இன்படி எல்லா முற்பணங்களும் அவ் அவ் நோக்கங்களுக்கு பயன்படுத்திய பின் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் 16 அலுவலர்களால் பெறப்பட்ட ரூபா 336,238 பெறுமதியான 16 சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் தேவை நிறைவடைந்து 1

மாதத்திலிருந்து 06 மாதங்கள் வரையான காலதாமதத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

ii. கல்வி அமைச்சினால் மாகாண நிதி ஒழுங்குவிதி 219.2 இற்கு முரணாக 07 சந்தர்ப்பங்களில் 06 பதவிநிலை தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு ரூபா 172,000 கூட்டுமொத்தமான செயல்நிமித்தக் கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 5.5 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாகாண நிதி விதிகள் 571 இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் காலங்கடந்த வைப்புகளின் பட்டியல் பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 88,090,458 கூட்டுத்தொகையான ஒரு அமைச்சு மற்றும் 09 திணைக்களங்களின் பிடித்துவைத்தல் பணம், செயற்திட்ட நிதி, கேள்வி வைப்புக்கள் மற்றும் தனியாள் வைப்புக்கள் என்பனவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டிருந்தன.

(ii) வாகனக் கொள்வனவு மற்றும் கட்டிட நிர்மாணம் தொடர்பான ரூபா 63,884,006 கூட்டுத்தொகையான மாகாண திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட நிதிகள் பிரதம செயலாளர் செயலகத்தினால் குறிப்பிடப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.

# 6. செயற்பாட்டு மீளாய்வு

## 6.1 செயலாற்றல்

(அ) விசேட நிதியங்களின் பயன்பாடு

மாகாண சபையின் அபிவிருத்தி வேலை முன்மொழிவுகளிற்காக பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட பாதிடப்பட்ட நிதியங்களின் விபரங்கள் மற்றும் அவற்றின் மீது ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| மூலங்களின் விபரம் | பாதிடப்பட்ட செலவினம் | உள்ளபடியான செலவினம் | சேமிப்புக்கள் | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்கள் (பிஎஸ்டிஜீ) | 3,199,300,000 | 1,800,000,000 | 1,399,300,000 | 57 |
| பிரமாணங்களினடிப்படையிலான மானியம் (சீபீஜீ) | 475,000,000 | 437,000,000 | 38,000,000 | 92 |
| கல்வித் துறை அபிவிருத்திச் செயற்திட்டம் (ஈஎஸ்டிபி)/ (ரீஎஸ்ஈபி) | 465,000,000 | 289,000,000 | 176,000,000 | 63 |
| வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (என்ஆர்சீபி) | 750,090,000 | 515,698,803 | 234,391,197 | 69 |
| ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெவ்) | 11,350,000 | 7,808,921 | 3,541,079 | 69 |
| யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் | 1,150,000,000 | 582,103,056 | 567,896,944 | 51 |
| இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்திட்டம் | 1,250,000,000 | 1,235,438,206 | 14,561,794 | 99 |
| சுகாதாரத் துறை அபிவிருத்திச் செயற்திட்டம் (எச்எஸ்டிபி) | 365,000,000 | 365,000,000 | - | 100 |
| மாகாண நிர்வாக கட்டிட நிர்மாணம் | 150,000,000 | 74,000,000 | 76,000,000 | 50 |
| வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (என்ஆர்சீபி) (மேலதிக நிதியிடல்) | 1,002,260,000 | 675,335,060 | 326,924,940 | 68 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 29 செலவினத் தலைப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,052,662,907 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் பாதீட்டு வழிகாட்டல்கள், மாகாண நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டவாறு மாகாணத்தின் தேவைகள் என்பவற்றை கருத்திற்கொள்ளாமல் பாதீட்டு முன்மொழிவுகள்

தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 04 அமைச்சுக்கள் மற்றும் 23 திணைக்களங்களினால் நிதியேற்பாடுகள் பெறப்படாமல் ரூபா 189,381,597 கூட்டுத்தொகையான மூலதன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மிகைக்கட்டண கணக்கின் ஊடாக ஆண்டிறுதியில் செலவினம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) **காற்றாலைகள் மூலமான மின்சார மின் பிறப்பாக்கி பொறிகளை நிறுவுதல்**

---

ரூபா 430 மில்லியன் நிதி உதவியுடன் 2014 மார்ச் 19 ஆம் திகதி காற்றாலைகள் மூலமான மின்சார மின் பிறப்பாக்கி பொறிகளை உருவாக்குவற்கு வடமாகாண செயலாளர் ஒருவரினால் இரு தனியார் கம்பனிகளுடன் ரூபா 430 மில்லியன் நிதி உதவியை கருத்திலெடுத்த பின்னர் 2014 மார்ச் 19 இல் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்கு குத்தகை வாடகையாக முதல் பத்து வருடத்திற்கு ரூபா 20 மில்லியன் படியும் மற்றும் அடுத்த பத்து வருடத்திற்கு ரூபா 23 மில்லியன் படியும் நிர்ணயிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இலங்கை மின்சார சபையினால் 2014 திசெம்பரிலிருந்து 2016 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு பளை பிரதேச பரப்பில் தேசிய மின் வழங்கல்களுக்கு மின்சாரம் வழங்கியமைக்கு ரூபா 2,933.81 மில்லியன் தொகை மேல் குறித்த கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கடந்த 03 வருடங்களுக்கு மேலாக வாடகையாக ரூபா 25 மில்லியன் தொகை மட்டுமே வடமாகாண சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(ii) இந்த வருமானத்திலிருந்து 02 வட மாகாண திணைக்களத்தில் இணைப்பு செய்யப்பட்ட 20 அலுவலர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக மொத்தமாக ரூபா 840,000 சம்பந்தப்பட்ட அதிகாரத்திடமிருந்து ஒரு அனுமதியும் பெறப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(iii) மேற்குறித்த செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கையில் வடமாகாண பிரதம செயலாளரினால் கையொப்பமிடப்படவில்லை.

(iv) இந்த நோக்கத்திற்காக அரச காணியினைப் பயன்படுத்துவதற்கு காணி ஆணையாளரிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(v) இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட முன்னர் மாகாண அமைச்சர்களின் சபையிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(vi) வடமாகாண சபையினுடைய பெயர் அல்லது அது சார்பாக கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்திற்கு சபையினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vii) இந்த செயற்றிட்டத்தினுடைய மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் மாகாணசபையினுடைய மதிப்பீட்டில் 2014 ஆம் ஆண்டிலிருந்து உள்ளடக்கப்பட்டிருந்திருக்கவில்லை.

(viii) இந்த செயற்றிட்டத்தினை செயற்படுத்தலினால் ஏற்படும் சூழல் பாதிப்பினை சம்பந்தப்பட்ட தரப்பினரால் மதிப்பிடப்பட்டிருந்திருக்கவில்லை.

## 6.2 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இல்லாத மன்னார் மாவட்டத்தின் நான்கு வீதிகள் ரூபா 5.1 மில்லியன் செலவில் மீளாய்வாண்டில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

(ஆ) கல்வித்திணைக்களத்தினால் ஒப்பந்ததாரர்களுக்கு பதினெட்டுத் தடவைகளில் மேலதிக கொடுப்பனவாக ரூபா 1,992,127 மற்றும் மன்னார் விவசாய பிரதிப்பணிப்பாளரின் உள்ளக வீதியினை அமைப்பதற்கு, அலுவலகத்தினால் ஒப்பந்ததாரருக்கு உண்மையாகச் செய்யப்பட்ட வேலையினை விட மதிப்பிடப்பட்ட அடிப்படையில் மேலதிக கொடுப்பனவாக ரூபா 231,158 வழங்கப்பட்டமை பௌதிக ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மன்னார் மாவட்டத்தில 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தீயினால் பாதிப்படைந்த கடைகளின் உரிமையாளர்களுக்கு முற்பணம் வழங்குவதற்காக மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் மன்னார் நகரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 06 மில்லியன் கட்டுநிதியில் இருந்து 2017 திசெம்பர் 31 வரை ரூபா 4.97 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் உரிய தரப்பினரால் 5 ஆண்டுகள் கடந்த நிலையில் தனியாருக்குச் செலுத்தப்பட்ட பணத்தை

அறவிட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் 2017 செப்தெம்பர் 07 இல் நடந்த பொதுக் கணக்குகள் குழுவால் முன்னரே சட்டமா அதிபர் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு சட்ட ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்குமாறு பிராதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

(ஈ) சுகாதார சேவை திணைக்களத்தினால் உயர் மருத்துவ பொறியியல் பிரிவினுடைய கட்டுமாண வேலைகள் பூர்த்தியாக்கப்படாமல் ரூபா. 1,839,239 பெறுமதியுடைய காசோலை ஒன்று மீளாய்வாண்டில் வரையப்பட்டிருந்தது.

## 6.3 வெளிப்படையான முறைமையீனங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 1999 யூன் 01 இல் திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட இல. PD/BP/9 சுற்றறிக்கைக்கு இணங்க மாகாண பொதுச் சேவையினுடைய தாபன விடய அலுவலர்களினது செயற்படுத்தல்களானது பொதுச் சேவையினுடைய தொடர்புடைய பதவிகளில் உள்ள அலுவலர்களுக்கு செயன்முறை தொடர்புகளிற்கிணங்க இதுவரை ஏற்றதாக இருக்க வேண்டும். இந்த சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கு மாறாக மாகாண சபையினுடைய நிதியிலிருந்து செயலாளர்களுக்காக மாதாந்த வாடகையாக ரூபா 15,000 மற்றும் மின்கட்டணமாக ரூபா 3,500 செலுத்துவதற்கு பிரதம செயலாளரினால் வேறொரு சுற்றுநிருபம் வழங்கியிருந்தார். இது தொடர்பில், 07 நவம்பர் 2017 அன்று நடந்த பொதுக் கணக்குக்குழுவானது இதுவரைக்கும் நிதி ஒழுங்கு விதி மற்றும் தாபன விதிகளினுடைய ஏற்பாடுகளுக்கு மாறாக இல்லை என்ற விடயம் மற்றும் அமுல்ப்படுத்தும் தீர்மானத்தினை அவதானிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கட்டளையிட்டது.

(ஆ) வட மாகாணத்தில் உள்ள விளையாட்டு கழகங்களுக்கிடையில் விநியோகிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 03 மில்லியன் பெறுமதிக்கு 4368 விளையாட்டு பொருட்கள் விளையாட்டுத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்படடிருந்தது. இவை விளையாட்டு கழகங்களுக்கிடையில் விநியோகித்தமைக்கான எத்தகைய ஆதாரங்களும் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு காலப்பகுதியில் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் மாகாணசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையானது சம்பந்தப்பட்ட நடவடிக்கைக்கு செயற்படுத்தப்படாமல் மாகாண விளையாட்டு திணைக்களத்தினுடைய வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

## 6.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு வவுனியா பூந்தோட்டத்தில் 20 அறைகளுடன் கூடிய சொந்தமான கட்டிட வசதிகள் இருந்தும் கூட கல்லூரியினுடைய நடவடிக்கை நோக்கத்திற்காக வாடகை அடிப்படையில் தனியார் கட்டிடம் ஒன்று பெறப்பட்டதற்காக வவுனியாவில் உள்ள கூட்டுறவுக் கல்லூரியினால் முன்னைய 07 ஆண்டுகளுக்கும் மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதியிலும் மாகாண நிதியிலிருந்து ரூபா. 2,700,000 கூட்டுமொத்த தொகையானது வாடகையாக செலவு செய்யப்பட்டிருக்கின்றது.

## 6.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களின் பௌதீக விளைவற்று பயன்பாடற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

| நிறுவனத்தின் பெயர் | சொத்துக்களின் வகுதி | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| விவசாய திணைக்களம் | வாகனங்கள் | 07 | 325,000 | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| | ரையிலர் | 04 | 95,000 | 05 ஆண்டுகளிற்கு மேல் |
| | நீர் இறைக்கும் இயந்திரங்கள் | 09 | 112,000 | 03 ஆண்டுகளிற்கு மேல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இயந்திரங்கள் | 02 | பெறுமதி தரப்படவில்லை | 06 ஆண்டுகளிற்கு மேல் |
| | ஏனைய சொத்துக்கள் | 01 | பெறுமதி தரப்படவில்லை | 04 ஆண்டிற்கு மேல் |
| கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | இயந்திரங்கள் | 16 | 3,694,432 | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| | கட்டிடம் | 06 | 35,798,794 | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| | ஆட்டுக் கொட்டகை மற்றும் கோழிக் கூடு | 04 | 4,695,830 | 01 ஆண்டிற்கு மேல் |
| | வாகனங்கள் | 09 | பெறுமதி தரப்படவில்லை | 05 ஆண்டுகளிற்கு மேல் |
| | உபகரணங்கள் | 1496 | 4,057,993 | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| | மின் பிறப்பாக்கிகள் | 05 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| காணி ஆணையாளர் திணைக்களம் | விடுதிகள் | | | |
| | - வவுனியா | 10 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| | - மன்னார் | 06 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| | - கிளிநொச்சி | 30 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| | - முல்லைத்தீவு | 44 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| | - யாழ்ப்பாணம் | 01 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |

| | | | | |
|---|---|---|---|---|
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் | ஏனைய சொத்துக்கள் | 25 | 955,000 | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| | கட்டிடங்கள் | 03 | 16,293,659 | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| கிராமிய அபிவிருத்தி திணைக்களம் | கட்டிடங்கள்- உணவு மற்றும் கைவினை கொட்டகை | 01 | 3,000,000 | 06 மாதங்களிற்கு மேல் |
| கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சு | மோட்டார் வாகனங்கள் | 03 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| கல்வி திணைக்களம் | மூடிய பாடசாலையுடன் தொடர்புடைய காணி கட்டிடங்கள் | 90 | பெறுமதி தரப்படவில்லை | 10 – 15 ஆண்டுகள் |
| | மோட்டார் சைக்கிள்கள் | 15 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| | ஏனைய சொத்துக்கள் | 517 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| | வகுப்பறைக் கட்டிடம் | 03 | 6,513,716 | 06 மாதங்களிற்கு மேல் |
| உள்ளூராட்சி திணைக்களம் | பயன்பாடற்ற பொருட்கள் | 34 | பெறுமதி தரப்படவில்லை | 04 ஆண்டுகளிற்கு மேல் |
| சுகாதார திணைக்களம் | மோட்டார் வாகனங்கள் | 25 | பெறுமதி தரப்படவில்லை | 08 ஆண்டுகளிற்கு மேல் |
| | பயன்பாடற்ற பொருட்கள் | 190 | பெறுமதி தரப்படவில்லை | 3 – 5 ஆண்டுகளிற்கு மேல் |
| | டயலஸ் இயந்திரம் மற்றும் பல்வேறுவகையான பொருத்திகள் | 08 | 43,989,506 | 06 மாதங்களிற்கு மேல் |

| | | | | |
|---|---|---|---|---|
| தொழில்துறை திணைக்களம் | அலுமாரிகள் | 04 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| | கைவினை கருவி | 12 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| | இயந்திரங்கள் | 12 | பெறுமதி தரப்படவில்லை | 01 ஆண்டிற்கு மேல் |
| | நீர் இறைக்கும் இயந்திரங்கள் | 03 | பெறுமதி தரப்படவில்லை | 01 ஆண்டிற்கு மேல் |
| | ஏனையவைகள் | 09 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல் | ஓஎச்பி புறஜெக்ரர் | 02 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |

(ii) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்களை பயன்படுத்தி கட்டப்பட்ட ரூபா 12.46 மில்லியன் பெறுமதியான 14 சந்தைகள் மற்றும் ரூபா 229.69 மில்லியன் பெறுமதியான 14 ஏனைய மூலதன வேலைகள் வேறுபட்ட காரணங்களினால் 02 வருடங்களிற்கு மேலாக உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுள்ளது.

(iii) மீளாய்வாண்டின் போது மூன்று முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் பௌதீக வளங்கள் விளைவற்று அல்லது குறை பயன்பாட்டுடன் காணப்படுகின்றது.

(iv) யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் 2016 திசெம்பர் 19 இல் ரூபா 107,482,000 பெறுமதியான 9 குருதிச்சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் ஏனைய வகை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2017 சனவரி 27 இல் 09 வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டது. 2017 இன் முதல் அரையாண்டின் போது 200 சிறுநீரக நோயாளிகள் பதிவிடப்பட்ட போதும் இவ் உபகரணங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் மேற்கூறிய வைத்தியசாலைகளில் கட்டட வசதி உட்பட போதிய இடவசதி

இல்லாமை மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட ஆளணி இல்லாமையினாலும் கடந்த 7 மாதங்களுக்கு மேலாக பயனற்றிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் " வைத்தியசாலைகளால் மருத்துவ உபகரண கோரிக்கை விடப்படாமல் தங்களுக்கு வழங்கப்பட்டதாகவும் மற்றும் பொருத்தமான பயிற்சிகளுடன் ஆலோசனையாளர், 3 மருத்துவ அலுவலர்கள், 3 தாதியர்கள் மற்றும் 3 சிற்றூழியர்கள் நியமிக்கப்படாமல் மருத்துவப் பொறிகள் இயக்கமுடியாது" எனவும் கூறியுள்ளார்.

(v) வரிசை அமைச்சு மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட பல வாகனங்களின் உரிமையினைப் பெறுவதற்கு மாகாணசபையினால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(vi) மூலிகைத்தோட்ட செயற்திட்டங்களுக்காக மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் உரிமையாக்கப்பட்ட காணியின் பெரும் பகுதி பயன்படுத்தப்படாது விரயமாகவிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. விபரங்கள் கீழே தரப்பட்டள்ளன.

| **காணியின் அமைவிடம்** | **மொத்தக் காணியின் அளவு** | **விரயமாகவுள்ள காணியின் அளவு** |
|---|---|---|
| | **ஏக்கரில்** | **ஏக்கரில்** |
| நவக்கிரி | 03 | 01 |
| கல்மடுநகர் | 100 | 40 |
| நறுவிக்குளம் | 05 | 05 |
| யோகபுரம் | 05 | 05 |
| நயினாமடுநகர் | 05 | 02 |
| மொத்தம் | **118** | **53** |

(vii) 2015 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்துறைத் திணைக்களத்தினால் ஒன்பது கைத்தறி நிலையங்களும் தும்புத் தொழிற்சாலையும் பயன்படுத்தப்படாதிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

(viii) வடமாகாணத்தில் 53 பாடசாலைகள் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டிருந்தும் அப் பாடசாலைகளின் காணி, கட்டடங்கள், தளபாடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

(ix) வடக்குக் கிழக்கு உள்ளுர் விருத்திச் செயற்திட்ட நிதியிலிருந்து சனத்தொகை குறைந்த மற்றும் கிராமப்புற பகுதிகளில் மொத்த தொகை ரூபா 459.91 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட முப்பத்தியிரண்டு அபிவிருத்தி வேலைகள் அதாவது சிறுவர் பூங்கா, சந்தை, பேரூந்து தரிப்பிடம், கடைத்தொகுதி, பயிற்சி நிலையங்கள் மற்றும் கலாச்சார மண்டபம் போன்றன மூன்று வருடங்களுக்கு மேலாக பயன்பாடற்றுள்ளது. மேலும் தலைமன்னார் புகையிரதநிலையம், இரணைஇலுப்பைக்குளம், பெரியமடு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட கடைத்தொகுதிகள் மற்றும் நல்லூர் பிரதேச சபை வளாகத்தில் கட்டப்பட்ட உள்ளக அரங்கு மற்றும் கலாச்சார மண்டபம் என்பன மூன்று வருடங்களுக்கு மேலாக உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாதுள்ளது.

(x) யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ரூபா 39,699,199 செலவில் கட்டப்பட்ட கீழ் குறிப்பிட்ட சந்தைகள் உள்ளடங்கலாக பல சந்தைக் கட்டிடங்கள் சந்தைக்குப் பொருத்தமற்ற இடங்களில் அமைக்கப்பட்டதனால் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாதுள்ளது.

| **சந்தையின் பெயர்** | **பிரதேச சபை** | **பெறுமதி** | **பயனற்றுள்ள காலம்** |
|---|---|---|---|
| | | **ரூபா** | **மாதங்களில்** |
| துறையூர் மீன் சந்தை | வேலனை | 10,299,852 | 42 |
| முத்தவெளி சந்தை தொகுதி | வேலனை | 16,729,347 | 06 |
| வேலனை சந்தை | வேலனை | 12,670,000 | 24 |
| | | **39,699,199** | |

## 6.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(i) 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த இழப்பு ரூபா 49,059,804 தொடர்பாக மாகண நிதி ஒழுங்கு விதி 70(5) இற்கு அமைவாக 04 மாகணத் திணைக்களத்தினால் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **திணைக்களத்தின் பெயர்** | **இழப்புக்களின் எண்ணிக்கை** | **பெறுமதி** |
|---|---|---|
| | | **ரூபா** |
| விவசாயம் | 05 | 98,259 |
| கால்நடை உற்பத்தி மற்றும் | 10 | 17,554,713 |

| | | |
|---|---|---|
| சுகாதாரம் | | |
| நீர்ப்பாசனம் | 09 | 21,761,867 |
| சுகாதார சேவைகள் | 11 | 9,644,965 |
| | **35** | **49,059,804** |

(ii) யுத்த காலத்தில் இடம்பெற்ற 10 வாகனங்கள் மற்றும் 02 இயந்திரங்களின் இழப்புக்கள் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தினால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6.7 ஒப்பந்த நிர்வாகம்

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முல்லைத்தீவிலுள்ள பாண்டியன்குளத்தில் ரூபா 2,785,495 பெறுமதியில் அமைக்கப்பட்ட கைத்தறித் தொழிற்துறைக் கட்டடத்தொகுதியில் கருதப்படக்கூடியளவு காலதாமதம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது எனினும் அரசின் பெறுகை வழிகாட்டியின் 8.14.1 ஆம் பந்தியின் பிரகாரம் தண்டப்பணம்/ தாமதக் கட்டணங்கள் விதிக்கப்படவில்லை.

(ஆ) கீழ்வரும் வேலைகள் மீதான குறைபாடுகள் அதாவது தாமதக் கட்டணங்கள் கழிக்கப்படாமை, நிர்மாண வேலைகளின் தரக்குறைவு, அளவுக் கணியச்சிட்டை விடயங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை ஆகியன அவதானிக்கப்பட்டு முகாமைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

| **வேலையின் பெயர்** | **தொகை** |
|---|---|
| | **ரூபா.மில்லியன்** |
| கலாச்சார மண்டபம், வவுனியா சிங்களப் பிரதேச சபை | 6.71 |
| புதிய அலுவலகக் கட்டடம் வவுனியா சிங்களப் பிரதேச சபை | 4.90 |
| மமிலும்குளம் மின்மாற்றி வீதி வவுனியா சிங்களப் பிரதேச சபை | 1.65 |
| புதிய அலுவலகக் கட்டடம் வவுனியா சிங்களப் பிரதேச சபை | 14.90 |
| சிறுவர் பூங்கா வவுனியா நகரசபை | 8.00 |
| | **36.16** |

(இ) ஊர்காவற்துறையிலுள்ள விளையாட்டு மைதானத்தின் திருத்த வேலைகள் பூர்த்தியாக்கல் காலம் முடிவடைந்து 85 நாட்களின் பின்னார் முடிவுறுத்தப்பட்டன. இது தொடர்பாக விளையாட்டுத்துறைத் திணைக்களத்தினால் ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 171,253 தாமதக் கட்டணம் மீளப்பெறப்படவில்லை.

### 6.8 பொருட்கள் விநியோகிப்பதில் தாமதம்

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 2,109,204 பெறுமதிக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் பிரமாண அடிப்படையிலான நிதி ஆகியவற்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் 2017 சனவரி 20 வரை பயனாளிகளுக்கிடையில் விநியோகிக்கப்படவில்லை.

### 6.9 செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

**(அ) நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் மற்றும் பூர்த்தி செய்யப்படாமல் காசோலை வரையப்பட்டிருத்தல்.**

வவுனியா மாவட்டத்தில் ரூபா 5 மில்லியன் செலவில் கட்டட கட்டுமாணம் செய்த மதிப்பீடு செய்யப்பட்டது. எனினும் கட்டுமான வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் செலவுகளை மேற்கொள்வதற்காக விளையாட்டுத் திணைக்களத்தினால் ரூபா 3,014,206 பெறுமதியான மூன்று காசோலைகள் வரையப்பட்டிருந்தது. 2016 செப்தெம்பர் 14 இல் ரூபா 1,786,341 பெறுமதியான ஒரு காசோலை வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது மற்றும் மேற்கூறப்பட்ட வேலைக்காக வரையப்பட்ட இரு காசோலைகள் உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல் வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இக் கபடித்திடல் இவ் அறிக்கைத் திகதி வரை நிர்மாணம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வளர்ப்புப் பண்ணையின் வினைத்திறனற்ற செயற்பாடு**

வடமாகாணத்தின் கால்நடை விருத்தியை மேம்படுத்தும் விசேட செயற்திட்டத்தின் கீழ் 50 ஏக்கர் நிலப்பரப்புடன் அனிஞ்சியன் குளம் வளர்ப்புப் பண்ணை நல்லின கறவைப் பசுக்களையும், ஆடுகளையும், உற்பத்தி செய்யும் நோக்குடனும், ஆண்டுதோறும் 36,000 லீட்டர் பசுப்பாலினையும் 25 மெற்றிக் தொன் இறைச்சியையும் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யவும் 2013 இல் உருவாக்கப்பட்டது. எவ்வாறாயினும் 17 பசு மாடுகளுடன் 08 எருதுகளுடனும் செயற்படும் பண்ணை வினைத்திறமையாக செயற்படவில்லை. சமகாலத்தில் 8

பசுமாடுகள் காட்டுப் பகுதிக்கு அருகிலுள்ள இப் பண்ணையில் காட்டுவிலங்குகளால் கொல்லப்பட்டிருந்தது.

2003 இல் ரூபா 3.7 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பால் கறவை உபகரணமும் பண்ணையால் பயன்படத்தப்படாமல் பயன்பாடற்று வைக்கப்பட்டுள்ளது. பண்ணை செயற்பாடுகளிற்காக ரூபா 4,632,674 செலவழிக்கப்பட்ட நிலையில் ரூபா 245,460 மட்டுமே வருமானமாக உழைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக பண்ணையில் ரூபா 4.4 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதுடன் ரூபா 1.2 மில்லியன் செலவில் கட்டப்பட்ட ஆட்டுப்பட்டியில் எவ்வித ஆடுகளும் காணப்படவில்லை. மேலும் பண்ணையை உருவாக்குவதற்காக அப்புறப்படுத்தப்பட்ட பெறுமதியான மரங்கள் இப் பண்ணை நிலத்தில் கணக்காய்வு களப்பரீட்சிப்பின் போது காணப்படவில்லை. இது தொடர்பில் பெறுமதியான மரங்களின் பதிவுகள் அலுவலகத்தில் பேணப்படவில்லை.

## 6.10 வடமாகாணத்தில் அமுலாக்கப்பட்ட வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் மீதான அவதானிப்புக்கள்

---

### 6.10.1 வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (என்ஆர்சிபி)

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 153.31 கி.மி நீளமான மாகாண வீதிகளை ரூபா 3,530.8 மில்லியன் செலவு செய்து நிர்மாணம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும் செயற்திட்ட காலத்தில் 147.65 கி.மி வீதிகளே கட்டுமானம் செய்யப்பட்டிருந்தது.

(ii) மீள் மதிப்பீடானது செயற்திட்ட காலத்தில் மூல மதிப்பீட்டிலிருந்து 2 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரித்தது எவ்வாறெனினும் மீள் மதிப்பீட்டிற்கான காரணம் பொருத்தமானதாக விளக்கப்பட்டிருக்கப்படவில்லை. விபரம் பின்வருமாறு.

| பொதி இல | மூல மதிப்பீடு (பிஓகியூ) | மீள்மதிப்பீடு (பிஓகியூ) | அதிகரிப்பு சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | |
| NP01 | 369,700,453 | 408,861,959 | 11 |
| NP03 | 331,858,549 | 337,782,743 | 02 |
| NP05 | 348,787,303 | 400,388,413 | 15 |

இது தொடர்பில் செயற்திட்ட பணிப்பாளர் ‘‘ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான வடிவமைப்பு, ஒப்பந்தம் வழங்கிய பின்னரே மேற்பார்வை உசாத்துணையாளரால் அனுமதிக்கப்ட்டிருந்தது’’ என கூறியுள்ளார்

### 6.10.2 வடகிழக்கு உளளூர் சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டம் (நெல்சிப்)

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்ட நிதியிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 775 மில்லியன் வட மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட போதிலும் ரூபா 13.8 மில்லியன் தொகை மீளவும் செலவழிக்கப்படாமல் 2016 திசெம்பர் 31 இல் உள்ளூராட்சி நிறுவனங்கள் கைகளில் இருந்தது. எவ்வாறெனினும் இத்தொகை செயற்திட்டத்தால் ஏற்பட்ட செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ii) முத்தவெளி சந்தை கட்டுமானத்தினை முழுமைப்படுத்துவதில் 3 வருட கால தாமதம் அவதானிக்கப்பட்டிருந்தது.

(iii) நிதிக்கட்டுப்பாட்டு விடயங்கள்

- கூட்டு மொத்தம் ரூபா. 90,591,729 செலவினம் உட்கட்டமைப்பு சேவை வழங்கல் வகுதிக்கு கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து செயற்திட்ட காலத்தில் எவ்வித காரணமும் வழங்கப்படாமல் இச் செலவினம் மிகை அறவீடு செய்யப்பட்டிருந்தது.

- பருத்தித்துறை நகரசபையினரால், பொதுமக்களால் விடுவிக்கப்பட்ட கழிவுநீரை அப்புறப்படுத்துவதற்காக செயற்திட்ட நிதியிலிருந்து ரூபா. 6,117,905 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இவ் நோக்கத்திற்கான அனுமதியை நன்கொடையாளரிடமிருந்து பெற்றிருக்கவில்லை.

(iv) பெறுமதி கூட்டிய வரி (வற்)
ஒப்பந்ததாரர்களின் வற் பதிவு இலக்கம் செயற்பாட்டில் இல்லாதபோது வற் செயற்படு தன்மையை உறுதிப்படுத்தாது ஒப்பந்த வேலைகள் தொடர்பில் ரூபா 3,168,012 தொகை பெறுமதி கூட்டிய வரிக்காக வடமாகாண 05 பிரதேச சபைகளால் செலுத்தப்பட்டிருந்தது.

## 6.11 மனிதவள முகாமைத்துவம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழ் வருமாறு.

### 6.11.1 பாடசாலைகள் தவிர்ந்த மாகாண சபையின் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்

| பதவியணியினர் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1,769 | 1,216 | 553 |
| மூன்றாம் நிலை | 1,625 | 979 | 646 |
| இரண்டாம் நிலை | 23,005 | 21,439 | 1,566 |
| ஆரம்ப நிலை | 8,580 | 8,388 | 192 |
| | **34,979** | **32,022** | **2,957** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ. மாகாண சபையினால் நிர்வாகசேவை, திட்டமிடல்சேவை, தொழில்நுட்பசேவை, கல்வி நிர்வாகசேவை, விஞ்ஞானசேவை, நூலகர்சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை தொடர்பிலான 2,957 வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ. இலங்கை உள்நாட்டு வருமான சேவையை சேர்ந்த ஆணையாளரோ அல்லது தொழில்சார் தகமையுள்ள அலுவலரோ நியமிக்கப்படாமல் மாகாண வருமாண திணைக்களம் இயங்கி வருகின்றது

இ. இலங்கை நிர்வாக சேவை முதலாம் வகுப்பு அலுவலர்கள் ஐந்து பேருக்கு 02 தொடக்கம் 06 மாதங்கள் அவர்கள் மாகாண சபையில் அல்லது வேறெங்கிலும் செயலாற்றாத நிலையில் சம்பளம் கொடுக்கப்பட்டிருந்தது.

ஈ. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறாமல் 03 மாகாண பொறியியல் சேவை அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

உ. எவ்வித சேவை பகுதிகளுக்கும் உள்வராத ஐம்பது அலுவலர் உறுப்பினர்கள் மாகாண சபையில் நியமிக்கப்பட்டு கடைமையாற்றி வருகின்றனர்.

### 6.11.2 பாடசாலை கல்வித்துறையின் ஆளணி

அதிபர், ஆசிரியர்களின் மிகை மற்றும் பற்றாக்குறைகள் மாகாண கல்வித்திணைக்களம் மற்றும் வலயகல்வி திணைக்களங்களில் காணப்படுகின்ற போதிலும் மாகாணத்திற்குள் மிகைகளை பற்றாக்குறைகளுக்கு இடமாற்றவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆளணி நிலைமைகள் கீழ் வருமாறு.

| மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி | | உள்ளபடியான ஆளனி | | வெற்றிடம் | | மிகை |
|---|---|---|---|---|---|---|---|
| | அதிபர் | ஆசிரியர்கள் | அதிபர் | ஆசிரியர்கள் | அதிபர் | ஆசிரியர்கள் | அதிபர் |
| யாழ்ப்பாணம் | 551 | 8,839 | 561 | 7,740 | - | 1,099 | 10 |
| கிளிநொச்சி | 147 | 2,294 | 96 | 2,008 | 51 | 286 | - |
| மன்னார் | 158 | 2,258 | 97 | 1,769 | 61 | 489 | - |
| வுவுனியா | 215 | 2,770 | 198 | 2,242 | 17 | 528 | - |
| முல்லைத்தீவு | 149 | 2,277 | 102 | 1,815 | 47 | 462 | - |
| மொத்தம் | **1,220** | **18,438** | **1,054** | **15,574** | **176** | **2,864** | **10** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ. ஐந்து மாவட்டங்களிலுமுள்ள ஆசிரியர்களுக்கான 2,864 வெற்றிடங்களையும் அதிபர்களுக்கான 176 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ. தேசியப் பாடசாலையான சம்பத்நுவர மகாவித்தியாலயம் வடமாகாணத்தின் ஆளுகையின் கீழ் இல்லாதபோதும் இப்பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுமான 44 பேருக்கு சம்பளமாக மாகாண நிதியத்திலிருந்து ஏறத்தாழ ரூபா 2,000,000 செலுத்தப்பட்டுள்ளது.

### 6.11.3 சுகாதாரத்துறை ஆளணி

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் (பிடிஎச்எஸ்) மற்றும் பிராந்திய சுகதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகள் (ஆர்டிஎச்எஸ்) என்பவற்றில் உத்தியோகத்தர்களில் மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் காணப்பட்ட போதும் மாகாணத்திற்குள் மிகைகளை பற்றாக்குறைகளுக்கு எதிராக சீராக்குவது

தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 31 டிசெம்பர் 2016 இல் உள்ளவாறான ஆளணி நிலைகள் கீழ் வருமாறு.

| மாவட்டம் | மருத்துவ உத்தியோகத்தர்கள் | | | பற்சிகிச்சை நிபுணர்கள் | | | தாதிய சேவைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக் கப்பட்டது | உள்ளபடி யானது | வெற்றிட ங்கள் | அனுமதிக் கப்பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடங் கள் | அனுமதிக் கப்பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடங் கள் |
| யாழ்ப்பாணம் | 218 | 165 | 53 | 37 | 24 | 13 | 246 | 210 | 36 |
| கிளிநொச்சி | 107 | 85 | 22 | 13 | 10 | 03 | 122 | 91 | 31 |
| முல்லைத்தீவு | 123 | 69 | 54 | 11 | 07 | 04 | 112 | 93 | 19 |
| வுவுனியா | 124 | 75 | 49 | 17 | 12 | 05 | 128 | 121 | 07 |
| மன்னார் | 149 | 133 | 16 | 14 | 20 | (06) | 218 | 201 | 17 |
| | **721** | **527** | **194** | **92** | **73** | **19** | **826** | **716** | **110** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ. ஆலோசனையாளர்களிற்கான 119 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 2016 திசெம்பர் 31 இல் 65 ஆலோசனையாளர்கள் மட்டுமே மாகாணத்தில் வேலை செய்கின்றனர்.

ஆ. மருத்துவ உத்தியோகத்தர்களிற்கான 721 அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 2016 திசெம்பர் 31 இல் 527 மருத்துவ உத்தியோகத்தர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். இதன் விளைவாக பல புறநகர் வைத்தியசாலைகள் எம்பீஎஸ் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரும் இல்லாமல் தொழிற்பட்டுவருகின்றன.

இ. பிரதான வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது. 2016 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட 826 ஆளணியில் 716 தாதிய உத்தியோகத்தர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர்.

ஈ. பற்சிகிச்சை நிபுணர்களுக்கான 92 அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 73 பற்சிகிச்சை நிபுணர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். இதன் விளைவாக மாகாணத்தில் 19 வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை.

உ. 42 இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை அதிகாரிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.12 மோட்டார் வாகனங்களின் பயன்பாடு

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ. மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு இணைப்புச்செய்யப்பட்ட இரு வாகனங்கள் 2016 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளாகியுள்ளது. இவ் வாகனங்கள் மீளாய்வாண்டில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் ரூபா 788,450 செலவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இத் தொகையில் ரூபா 277,285 மட்டுமே காப்புறுதிக் கோரிக்கையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் விபத்துத் தொகை ரூபா 511,165 இனை நிதி ஒழுங்குவிதி 104 மற்றும் 110 இற்கு அமைவாக விபத்து இழப்பைத் தீர்மானிப்பதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுத்திருக்கப்படவில்லை.

ஆ. மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களினால் ஒன்று தொடக்கம் ஐந்து ஆண்டுகள் வரையான காலவீச்சில் அநேகமான வாகனங்கள் திருத்த வேலைகளுக்காக திருத்த நிலையங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன

## 6.13 வங்கிக் கணக்கிணக்கம்

---------------------------------------

மாகாண நிதி ஒழுங்கு விதி 237 இற்கு அமைவாக ஆறு மாதங்களுக்கு மேலான ரூபா 73,474 பொறுமதியான சமர்ப்பிக்கப்படாத இரு காசோலை தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்வில்லை.

## 6.14 உள்ளுர் அதிகாரசபை விபரங்கள் மீதான மேற்பார்வை

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளுர் அதிகாரசபைகளின் நிதிக்கூற்றுக்கள் மீதான முனைப்பழியுடனான கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டங்கள் | உள்ளூரதிகாரசபைகளின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீது வெளிப்படுத்தப்பட்ட முனைப்பழியுடனான அபிப்பிரயாங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 17 | 17 |
| முல்லைத்தீவு | 04 | 04 |
| கிளிநொச்சி | 03 | 03 |
| வவுனியா | 05 | 05 |
| மன்னார் | 05 | 05 |
| | **34** | **34** |

உள்ளூராட்சி சபைகள் தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையின் பிரதான அவதானிப்புக்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளன

அ. பயன்படுத்தப்படாத நிதி

-------------------------------------

மொத்த திரட்டிய தொகை ரூபா 1,367,448,670 அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படாது 34 உள்ளூராட்சி சபைகளினால் நிலையான வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

ஆ. புறாக் கூடு புனரமைத்தல்

-----------------------------------------

நெடுந்தீவு உள்ள புறாக்கூடு புனரமைப்பிற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,292,854 ஒதுக்கீடு செய்யப்பட்டடிருந்தது. இத் தொகையில், தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்படால் ரூபா 612,401 மட்டும் இவ் வேலைக்காக செலவிடப்பட்டுள்ளது மிகுதி வேலை 2018 ஏப்ரல் 10 வரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இ. 2016 ஆம் ஆண்டில் வலி வடக்கு பிரதேச சபையினால் ஒரு மில்லியன் செயற்திட்டத்தின் கீழ் தனியார் காணியில் உரிமையாளரின் அனுமதி பெறப்படாமல் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது எனினும் பூரணப்படுத்தப்பட்ட சிறுவர் பூங்கா 02 வருடங்களுக்கு மேலாக உரிய தேவைக்குப் பயன்படுத்தப்படாதுள்ளது இது தொடர்பாக ''நகுலேஸ்வரம் கோயில் அறங்காவலர்களால் பொது அணுகல் பற்றி மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட வழக்கின் தீர்ப்பு நிலுவையாக உள்ளதாக'' சபையின் பிரதம செயலாளர் கூறுகின்றார்.

ஈ. மாநகரசபையினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் மற்றும் சம்பளக் கொடுப்பனவு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறப்படாமல் 2014 மார்ச் 20 இல் மாநகரசபையினால் கால்நடை மருத்துவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார் எனினும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நியமனத்தினை முடிவுறுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார். இருந்தபோதிலும், இவ் நியமனம் 2015 மார்ச் 23 வரை தொடரப்பட்டுள்ளதுடன் ரூபா 419,215 ஆன தொகை சம்பளமாக இவ் உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

ii. மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் மாநகரசபையின் மூலதன வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக மாதாந்தம் ரூபா 35,297 சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் 01-09-2014 தொடக்கம் 15-02-2015 வரையான காலப்பகுதிக்கு பொறியிலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார் எனினும் அவரது சேவை 2015 ஒக்தோபர் 13 வரை அனுமதி பெறப்படாமல் தொடரப்பட்டுள்ளதுடன் அனுமதிக்கப்படாத காலப்பகுதிக்காக மொத்த தொகை ரூபா 421,254 சம்பளமாக செலுத்தப்பட்டுள்ளது மேலும் மொத்த தொகை ரூபா 294,840 அவ் உத்தியோகத்தரின் போக்குவரத்திற்கு செலவழிக்கப்பட்டிருந்தது.

iii. அரைத் திறமை ஊழியர் சேவைக்கான சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட கல்வித் தகமை மற்றும் தேவையான தொழிற்தகமை என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாமல் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் ஏழு மின்னியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 விண்ணப்பதாரர்களில் 23 விண்ணப்பதாரர்கள், இது தொடர்பில் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் படி நேர்முகப் பரீட்சைக்கு தகுதி உள்ள போதும் நிராகரிக்கப்பட்டிருந்தமை இதன் போது அவதானிக்கப்பட்டது.

iv. யாழ்ப்பாணம் மாநகர சபையினால் 2014 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட 10 தீயணைப்பாளர்களில் 3 தீயணைப்பாளர்கள் மாகண தீயணைப்பாளர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பின் 16.3 ஆம் பிரிவின் பிரகாரம் தேவையான தகமைகளைப் பூர்த்திசெய்திருக்கவில்லை.

உ. மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாணம் மாநகர சபையின் முகாமைத்துவ உதவியாளர் ரூபா 2,934,429 பணமோசடியில் ஈடுபட்டுள்ளார். எனினும் ரூபா 320,000 தொகை மட்டுமே இவ் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

ஊ. யாழ்ப்பாணம் மாநகரசபையினால் ரூபா 21,653,627 மற்றும் ரூபா 65,150,000 தொகைகள் முறையே தனியார் வங்கி மற்றும் மாநகரசபையின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு வெளியில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்களில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

எ. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பல உள்ளூரதிகார சபைகளின் கீழ் உள்ள பௌதீகவளங்கள் விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டிற்குட்பட்டிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. கீழே பகுப்பாயப்பட்டுள்ளது.

| **சொத்தின் வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** |
|---|---|
| காணி மற்றும் கட்டடங்கள் | 05 |
| வாகனங்கள் | 14 |
| | **19** |

ஏ. ரூபா 28,998 பெறுமதியான இருபத்தொன்பது சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் பூநகரிப் பிரதேச சபையினால் அரச வருமானக் கணக்கிற்கு மாற்றப்படாமல் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

ஐ. 2004 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு வீடமைப்பு புனர்வாழ்வு செயற்திட்டத்தினால் அமைக்கப்பட்ட மாந்தை பிரதேச சபை அலுவலகக் கட்டடம் 2009, 2011, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 4 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. பின்னர் பழைய கட்டடம் இடிக்கப்பட்டு ‘‘புறநெகும’’ செயற்திட்டத்தின் கீழ் ரூபா 23.19 மில்லியன் செலவில் மீளமைக்கப்பட்டுள்ளது. அகற்றப்பட்ட பாவனைக்குதவாத பொருட்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு பிரதேச சபையின் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை.

ஒ. வடமாகாணத்தின் உள்ளூரதிகார சபைகளின் எல்லைகளுக்குள் அமைக்கப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக அதாவது அபிவிருத்திக்கான அனுமதிப் பத்திரம் வழங்கல், ஆரம்ப திட்டத்தினை அனுமதித்தல், உறுதிப்படுத்தல் சான்றிதழ் வழங்கல் மற்றும் உள்ளடக்க அனுமதி பேன்ற நான்கு வகையான கட்டணங்கள் சேகரிக்கப்பட வேண்டும். எனினும் அந்த கட்டணங்கள் மதிப்பீட்டினடிப்படையில் சேகரிக்கப்படாததுடன் மற்றும் வர்த்தககமாணியின்

அசாதாரண அறிவிப்பு இல. 2009 ஏப்பிரல் 17 இன் 1597/8 பிரகாரம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படவில்லை.

ஓ. வடமாகாணத்தில் உள்ளூரதிகார சபையின் அதிகாரமளிக்கப்பட்ட பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு விளம்பரங்களிலிருந்து விளம்பரக்கட்டணம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஔ. வடமாகாணத்தின் 34 உள்ளூரதிகார சபைகளில் 2016 திசெம்பர் 31 வரையிலும் சேகரிக்கப்படாதுள்ள நிலுவை வருமான மொத்த தொகை ரூபா 1,867,898,761 இனை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

க. யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரமளிக்கப்பட்ட எல்லைக்குள் இயங்கிவரும் 02 அனுமதியளிக்கப்படாத புகழ் பெற்ற சுற்றுலா விடுதிகளிடமிருந்து வீதங்கள் மற்றும் வரிகள் அறவிடப்படவில்லை.

கா. சாவகச்சேரி நகர சபையினால் வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையிடமிருந்து பேரூந்து தரிப்பு நிலையங்களிற்கான வாடகை அறவிடப்படவில்லை.

கி. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 07 உள்ளூரதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தனியார் கம்பனிகளால் அமைக்கப்பட்ட 32 நிலைமாற்று கோபுரங்களுக்கான கட்டணங்கள் சேகரிக்கப்படாதுள்ளது.

கீ. மீளாய்வாண்டின் போது மாநகர சபை, நகர சபை, மற்றும் 03 பிரதேச சபை ஆகியவற்றினால் சேகரிக்கப்படாதுள்ள திரட்டிய தொகை ரூபா 813,854 கடன்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை

கு. 2013 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்காக குத்தகை காணிகளுக்கான குத்தகைக்கட்டணம் ரூபா 1,014,069 ஐ குத்தகையாளரிடமிருந்து சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மாகாண சபை, 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 27 மாகாணத் திணைக்களங்கள் என்பன மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டங்களை 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்திற்கு அமைய தயாரித்திருக்கவில்லை.

## 7.2 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------

2009 யூன் 09 ஆம் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றுநிருபம் இல. டிஎம்ஏ/2009(i) மற்றும் மாகாண நிதி ஒழுங்கு விதி 98 இற்கு அமைவாக 5 மாகாணத் திணைக்களங்களினால் உள்ளகக் கணக்காய்வு அலகு நிறுவப்படவில்லை.

## 7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

--------------------------------------------------------------------------

2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் குறைந்தது காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 06 மாகாணத் திணைக்களங்களும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்றையேனும் நடாத்தியிருக்கவில்லை.

## 7.4 வடகிழக்கு மாகாண சபையைப் பிரித்தல்

-----------------------------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையின் அடிப்படையில் 2006 திசெம்பர் 22 இல் அப்போதைய வடகிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டது. எனினும், பிரிக்கப்பட்டமை மற்றும் வடக்கு மாகாண சபை நிறுவப்பட்டமை என்பன தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2016 திசெம்பர் 31 வரை பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. அப்போதைய வடகிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டதிலிருந்து 7 ஆண்டுகளின் பின்னரே 2013 ஒக்தோபர் 25 இல் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை நிறுவப்பட்டது.

## 7.5 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

-------------------------------------------------------------

மாகாண நிதி ஒழுங்கு விதி 257.2 மற்றும் 2017 சனவரி 12 இல் வடமாகாண சபைக்கு பிரதம செயலாளரினால் வழங்கப்பட்ட மாகாணத் திறைசேரி சுற்று நிருபம் இல. பிஎவ்/ஏபி/01/2017 என்பவற்றிற்கமைவாக 01 அமைச்சு மற்றும் 4 திணைக்களங்களினால் 2016 ஆம் வருடாந்த நடவடிக்கைகளுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**7.6 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

-------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ) கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்ட தீர்வு காணப்படாத விடயங்கள்

-------------------------------------------------------------------------------------------------------------------------

முன்னைய வருடங்களில் வழங்கப்பட்ட எனது கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பல ஒழுங்கீனங்களை திருத்துவதற்கு உரிய அதிகாரங்களினால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

i. யுத்தத்தில் உயிரிழந்த எல்ரிரிஈ போராளிகள் விசேட தேவையுடைய அரசியல் கைதிகள், புனர்வாழ்வளிக்கப்பட்ட கைதிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூபா 43 மில்லியன்.

ii. வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற சம்பளக் கொடுப்பனவு ரூபா. 105,345

iii. இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II மற்றும் இலங்கை ஆசிரியர் சேவைக்கு மேற்கொள்ளப்பட்ட முறையற்ற நியமனங்கள்.

iv. வடக்கு கிழக்கு உளளுர் சேவைகள் விருத்தி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மோசடியான கொடுப்பனவு ரூபா 4,418,506.

v. வவுனியா பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் 25.05.2016 வரை தொடர்புடைய நபர்களிற்கு வழங்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த ரூபா 813,600 பெறுமதியான காசோலைகள்

vi. கட்டடங்கள் திணைக்களத்தினால் தொடர்புடையவர்களிற்கு 31.03.2016 வரை வழங்காமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த ரூபா 9,630,004 பெறுமதியான 08 காசோலைகள்.

vii. மன்னார் மாவட்ட உள்ளுராட்சி நிறுவனங்களினால் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு செலுத்தப்படாத ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 1,840,390

viii. மன்னார் கல்வி வலையத்தில் ஏற்பட்ட வாகன விபத்து நட்டம் ரூபா 1,735,000

ஆ) மாகாண பொதுக் கணக்குக் குழுவின் 2017 யூன் 09,17 இல் வழங்கப்பட்ட கட்டளைக்கு தொடர்புடைய அதிகார தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்படாத விடயங்கள்.

i) இனங்காணப்பட்ட நட்டம் ரூபா 17,554,713

ii) ரூபா 4,425,000 பெறுமதியான 10 டிரக்டர் மற்றும் 05 ரெயிலர்களுக்கான முறையற்ற பெறுகை

iii) மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தையல் இயந்திரத்திரம் தொடர்பான பயனாளிப் பட்டியலும் விபர அறிக்கையும் சமர்ப்பிக்கப்படாமை.

iv) யா/ இந்து ஆரம்ப பாடசாலையால் சேகரிக்கப்பட்ட அனுமதிக் கட்டணம் ரூபா 2.4 மில்லியன்

## 8. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது

| | | |
|---|---|---|
| i. வருமாண நிர்வாகம் | - | வருமான மதிப்பீடு ஆக்கபூர்வமான கருவியொன்றாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. ஒப்பந்த நிர்வாகம் | - | ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகள் முடிவுறுத்தப்படாதமை |
| iii. வாகனப் பயன்பாடு | - | விபத்துக்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| iv. நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு | - | நிலையான சொத்துக்களின் பாவனை மற்றும் பராமரிப்பு மிகவும் மந்தமாக உள்ளது |
| v. உள்ளகக் கணக்காய்வு | - | உள்ளகக் கணக்காய்வு அலகு பல மாகாணத் திணைக்களங்களில் நிறுவப்படவில்லை |